www.Padasalai.Net www.Trb Tnpsc.com

**K.J.கீழ முஸ்லிம் மேல்நிலைப்பள்ளி, பரமக்குடி-- இராமநாதபுரம் மாவட்டம்**

**S.கலீல் ரகுமான், முதுகலை ஆசிரியர் ( பொருளியல் ) அலைபேசி -- 9443013375**

**பொதுத்தேர்வு -- மார்ச் 2024 ( விடைக் குறிப்புகள் )**

**பன்னிரண்டாம் வகுப்பு -- பொருளியல் ( TYPE – A )**

| | **சரியான விடையைத் தெரிவு செய்க** | **சரியான விடை** |
|---|---|---|
| **1)** | MPC ஐயும் MPS ஐயும் கூட்டினால் கிடைப்பது<br>அ) 0.1 ஆ) 1 இ) 1.1 ஈ) 2 | **ஆ) 1** |
| **2)** | GST இதற்குச் சமம்<br>அ) வருமான வரி ஆ) விற்பனை வரி<br>இ) உள்ளாட்சி வரி ஈ) தொழிற்குழும வரி | **ஆ) விற்பனை வரி** |
| **3)** | அமைப்புசார் வேலையின்மையின் இயல்பு ----------------------<br>அ) இயங்கா சமுதாயம் ஆ) இயங்கும் சமுதாயம்<br>இ) கலப்புப் பொருளாதாரம் ஈ) சமதர்ம சமுதாயம் | **ஆ) இயங்கும் சமுதாயம்** |
| **4)** | எந்தப் பொருளாதாரத்தில் உற்பத்தி உரிமை தனியாருக்கு மட்டுமே உள்ளது?<br>அ) உலகமய பொருளாதாரம்<br>ஆ) முதலாளித்துவப் பொருளாதாரம்<br>இ) கலப்புப் பொருளாதாரம்<br>ஈ) சமதருமப் பொருளாதாரம் | **ஆ) முதலாளித்துவப் பொருளாதாரம்** |
| **5)** | இருமாறிகளின் மதிப்புகளும் ஒரே திசையில் நகர்ந்து சென்றால் அதனை ..............உடன்தொடர்பு என்கிறோம்.<br>அ) பன்முக ஆ) எதிர்மறை இ) எளிய<br>ஈ) நேர்கணிய | **ஈ) நேர்கணிய** |
| **6)** | இந்தியாவில் வெளிநாட்டு நேரடி மூலதனம் அனுமதிக்கப்படாத துறை<br>அ) மருந்து உற்பத்தி ஆ) வங்கி இ) காப்பீடு<br>ஈ) அணு ஆற்றல் | **ஈ) அணு ஆற்றல்** |
| **7)** | மையவங்கி நாட்டின் .......................... அதிகார அமைப்பு<br>இ) கூலி ஆ) பணவியல் இ) தேசிய வருவாய்<br>ஈ) நிதியியல் | **ஆ) பணவியல்** |
| **8)** | பணவீக்கம் என்பது<br>அ) பணமதிப்பு அதிகரிப்பு ஆ) விலைகள் அதிகரிப்பு<br>இ) விலைகள் மாறாதிருத்தல்<br>ஈ) விலைகள் குறைதல் | **ஆ) விலைகள் அதிகரிப்பு** |
| **9)** | சராசரி நுகர்வு நாட்டம் கணக்கிடப்படுவது<br>அ) Y / C அ) $C\ /\ Y$ இ) C + Y ஈ) C Y | **ஆ) $C\ /\ Y$** |
| **10)** | ஆசியான் விவாதத்தில் பங்கெடுக்கும் ஆறு நாடுகளில் சேராத நாடு<br>அ) இந்தியா ஆ) சீனா இ) வடகொரியா<br>ஈ) ஜப்பான் | **இ) வடகொரியா** |

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

| | | |
|---|---|---|
| 11) | இந்தியாவில் திட்டக்குழு அமைக்கப்பட்ட ஆண்டு<br>அ) 1947 ஆ) 1950 இ) 1948 ஈ) 1951 | **ஆ) 1950** |
| 12) | கேட்கும் திறன் இழப்பு .......................... மாசுவின் விளைவாகும்.<br>அ) நீர் ஆ) ஒலி இ) நிலம் ஈ) காற்று | **ஆ) ஒலி** |
| 13) | புதிய பேரியல் பொருளியலின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?<br>அ) ராக்னர் பிரிஸ்சு ஆ) ஆடம் ஸ்மித்<br>இ) காரல் மார்க்சு ஈ) ஜே.எம்.கீன்சு | **ஈ) ஜே.எம்.கீன்சு** |
| 14) | பணமாற்றுவீதம் நிர்ணயமாகும் சந்தை<br>அ) பங்குச் சந்தை ஆ) பணச் சந்தை<br>இ) மூலதனச் சந்தை<br>ஈ) அயல்நாட்டு செலாவணிச் சந்தை | **ஈ) அயல்நாட்டு செலாவணிச் சந்தை** |
| 15) | எவற்றைக்கூட்டி வருமானமுறையில் நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது?<br>அ) செலவு ஆ) உற்பத்தி இ) வருமானம் ஈ) வரி. | **இ) வருமானம்** |
| 16) | பொருளாதார அளவையியல் எனும் சொல்லை உருவாக்கியவர்<br>அ) கார்ல் பியர்சன் ஆ) பிரான்சிஸ் கால்டன் இ) ஸ்பியர்மேன் ஈ) ரேக்னர் பிரிஸ்ச் | **ஈ) ரேக்னர் பிரிஸ்ச்** |
| 17) | சிறப்பு எடுப்புரிமையின் மற்றொரு பெயர்<br>அ) தன் விருப்ப ஏற்றுமதித் தடைகள்<br>ஆ) தாள் தங்கம் இ) காப்புரிமை ஈ) பங்களவுகள் | **ஆ) தாள் தங்கம்** |
| 18) | குறுகியகால திட்டத்தின் இன்னொரு பெயர்<br>அ) சுழல் திட்டம் இ) சுழற்சியற்ற திட்டம்<br>ஆ) கட்டுப்படுத்தும் திட்டம்<br>ஈ) கட்டுப்பாட்டை நீக்கும் திட்டம் | **ஆ) கட்டுப்படுத்தும் திட்டம்** |
| 19) | சேமிப்புக்கும் முதலீட்டுக்குமிடையே சமநிலையைக் கொண்டுவருவது ...................... நெகிழ்வு ஆகும்.<br>அ) மூலதனத்தின் ஆ) தேவையின்<br>இ) வட்டிவீதத்தின் ஈ) அளிப்பின் | **இ) வட்டிவீதத்தின்** |
| 20) | இர்விங் பிஷரின் பணஅளவுக் கோட்பாடு புகழ்பெற்ற ஆண்டு<br>அ) 1911 ஆ) 1908 இ) 1914 ஈ) 1910 | **அ) 1911** |

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

## பொதுத்தேர்வு -- மார்ச் 2024 ( விடைக் குறிப்புகள் )

## பன்னிரண்டாம் வகுப்பு -- பொருளியல் ( TYPE – B )

| | சரியான விடையைத் தெரிவு செய்க | சரியான விடை |
|---|---|---|
| 1) | சேமிப்புக்கும் முதலீட்டுக்குமிடையே சமநிலையைக் கொண்டுவருவது ------------------------ நெகிழ்வு ஆகும்.<br>அ) மூலதனத்தின் ஆ) தேவையின்<br>இ) வட்டிவீதத்தின் ஈ) அளிப்பின் | இ) வட்டிவீதத்தின் |
| 2) | கேட்கும் திறன் இழப்பு ......................... மாசுவின் விளைவாகும்.<br>அ) நீர் ஆ) ஒலி இ) நிலம் ஈ) காற்று | ஆ) ஒலி |
| 3) | இந்தியாவில் வெளிநாட்டு நேரடி மூலதனம் அனுமதிக்கப்படாத துறை<br>அ) மருந்து உற்பத்தி ஆ) வங்கி இ) காப்பீடு<br>ஈ) அணு ஆற்றல் | ஈ) அணு ஆற்றல் |
| 4) | இருமாறிகளின் மதிப்புகளும் ஒரே திசையில் நகர்ந்து சென்றால் அதனை -------------------- உடன்தொடர்பு என்கிறோம்.<br>அ) பன்முக ஆ) எதிர்மறை இ) எளிய<br>ஈ) நேர்கணிய | ஈ) நேர்கணிய |
| 5) | புதிய பேரியல் பொருளியலின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?<br>அ) ராக்னர் பிரிஸ்சு ஆ) ஆடம் ஸ்மித்<br>இ) காரல் மார்க்சு ஈ) ஜே.எம்.கீன்சு | ஈ) ஜே.எம்.கீன்சு |
| 6) | பணவீக்கம் என்பது<br>அ) பணமதிப்பு அதிகரிப்பு ஆ) விலைகள் அதிகரிப்பு<br>இ) விலைகள் மாறாதிருத்தல்<br>ஈ) விலைகள் குறைதல் | ஆ) விலைகள் அதிகரிப்பு |
| 7) | எவற்றைக்கூட்டி வருமானமுறையில் நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது?<br>அ) செலவு ஆ) உற்பத்தி இ) வருமானம் ஈ) வரி. | இ) வருமானம் |
| 8) | இந்தியாவில் திட்டக்குழு அமைக்கப்பட்ட ஆண்டு<br>அ) 1947 ஆ) 1950 இ) 1948 ஈ) 1951 | ஆ) 1950 |
| 9) | மையவங்கி நாட்டின் .......................... அதிகார அமைப்பு<br>இ) கூலி ஆ) பணவியல் இ) தேசிய வருவாய்<br>ஈ) நிதியியல் | ஆ) பணவியல் |
| 10) | இர்விங் பிஷரின் பணஅளவுக் கோட்பாடு புகழ்பெற்ற ஆண்டு<br>அ) 1911 ஆ) 1908 இ) 1914 ஈ) 1910 | அ) 1911 |

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

| | | |
|---|---|---|
| **11)** | அமைப்புசார், வேலையின்மையின் இயல்பு ..................<br>அ) இயங்கா சமுதாயம் ஆ) இயங்கும் சமுதாயம்<br>இ) கலப்புப் பொருளாதாரம் ஈ) சமதர்ம சமுதாயம் | **ஆ) இயங்கும் சமுதாயம்** |
| **12)** | MPC ஐயும் MPS ஐயும் கூட்டினால் கிடைப்பது<br>அ) 0.1 ஆ) 1 இ) 1.1 ஈ) 2 | **ஆ) 1** |
| **13)** | சிறப்பு எடுப்புரிமையின் மற்றொரு பெயர்<br>அ) தன் விருப்ப ஏற்றுமதித் தடைகள்<br>ஆ) தாள் தங்கம் இ) காப்புரிமை ஈ) பங்களவுகள் | **ஆ) தாள் தங்கம்** |
| **14)** | சராசரி நுகர்வு நாட்டம் கணக்கிடப்படுவது<br>அ) Y / C அ) $C / Y$ இ) C + Y ஈ) C Y | **ஆ) $C / Y$** |
| **15)** | பொருளாதார அளவையியல் எனும் சொல்லை உருவாக்கியவர்<br>அ) கார்ல் பியர்சன் ஆ) பிரான்சிஸ் கால்டன்<br>இ) ஸ்பியர்மேன் ஈ) ரேக்னர் பிரிஸ்ச் | **ஈ) ரேக்னர் பிரிஸ்ச்** |
| **16)** | ஆசியான் விவாதத்தில் பங்கெடுக்கும் ஆறு நாடுகளில் சேராத நாடு<br>அ) இந்தியா ஆ) சீனா இ) வடகொரியா<br>ஈ) ஜப்பான் | **இ) வடகொரியா** |
| **17)** | எந்தப் பொருளாதாரத்தில் உற்பத்தி உரிமை தனியாருக்கு மட்டுமே உள்ளது?<br>அ) உலகமய பொருளாதாரம்<br>ஆ) முதலாளித்துவப் பொருளாதாரம்<br>இ) கலப்புப் பொருளாதாரம்<br>ஈ) சமதருமப் பொருளாதாரம் | **ஆ) முதலாளித்துவப் பொருளாதாரம்** |
| **18)** | பணமாற்றுவீதம் நிர்ணயமாகும் சந்தை<br>அ) பங்குச் சந்தை ஆ) பணச் சந்தை<br>இ) மூலதனச் சந்தை<br>ஈ) அயல்நாட்டு செலாவணிச் சந்தை | **ஈ) அயல்நாட்டு செலாவணிச் சந்தை** |
| **19)** | குறுகியகால திட்டத்தின் இன்னொரு பெயர்<br>அ) சுழல் திட்டம் இ) சுழற்சியற்ற திட்டம்<br>ஆ) கட்டுப்படுத்தும் திட்டம்<br>ஈ) கட்டுப்பாட்டை நீக்கும் திட்டம் | **ஆ) கட்டுப்படுத்தும் திட்டம்** |
| **20)** | GST இதற்குச் சமம்<br>அ) வருமான வரி ஆ) விற்பனை வரி<br>இ) உள்ளாட்சி வரி ஈ) தொழிற்குழும வரி | **ஆ) விற்பனை வரி** |

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

| பகுதி -- ஆ | | $7 \times 2 = 14$ |
|---|---|---|
| 21) | **முதலாளித்துவம் என்றால் என்ன?**<br>* பொருளாதார நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதில் அரசின் பங்கு குறைவாகவும், சந்தையின் பங்கு அதிகமாகவும் இருக்கும்.<br>* உற்பத்தி நடவடிக்கைகள் தனியார் வசம் இருக்கும்.<br>* இலாப நோக்கமே முதன்மையானது. | |
| 22) | **நெகிழிப்பணம் என்றால் என்ன? உதாரணம் தருக.**<br>* நிதிப்பொருள்களின் வரிசையில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தோற்றம்.<br>* காகிதப்பணத்திற்கு மாற்றாகவும், தினந்தோறும் பயன்படுத்தும் வகையில் நெகிழி அட்டையால் உருவாக்கப்பட்டிருக்கும்.<br>* உதாரணம் - ரொக்க அட்டை, கடன் அட்டை, பற்று அட்டை, சூட்டிகை அட்டை | |
| 23) | **முழு வேலைவாய்ப்பு வரையறு.**<br>* நல்ல உடல்நலம் உள்ளதனிமனிதர்கள், நிலவுகின்ற கூலிவிகிதத்தில் வேலைசெய்யத் தயாராக இருப்பவர்கள் அனைவருக்கும் வேலை கிடைப்பது. | |
| 24) | **நாட்டு வருமானக் கணக்கீட்டில் " சொந்த நுகர்வு " எவ்வாறு சிக்கலைத் தருகிறது?**<br>* விவசாயிகள் தங்களின் சொந்த நுகர்விற்காக விற்பனை செய்யாமல் ஒதுக்கிய உற்பத்தி நாட்டு வருமானத்தில் சேர்க்கப்பட்டதா என்பதைக் கண்டறிவதில் சிக்கல் ஏற்படுகிறது. | |
| 25) | **உடன்பாடில்லா வேலையின்மை பற்றிச் சிறுகுறிப்பு வரைக.**<br>* உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவது உடன்பாடில்லா வேலையின்மை எனப்படும்.<br>* தற்காலிக அல்லது பிறழ்ச்சி வேலையின்மை என்றும் அழைக்கப்படும். | |
| 27) | **வேளாண் கடன் வழங்கும் துறையின் பணிகளைக் குறிப்பிடுக.**<br>• நிபுணத்துவம் பெற்ற அலுவலரை நியமித்து வேளாண் கடன் தொடர்பான அனைத்து வினாக்களையும் ஆய்வு செய்வது.<br>• மைய அரசு, மாநில அரசு, மாநிலக் கூட்டுறவு மற்றும் இதர வங்கிகளின் நடவடிக்கைகளில் நிபுணத்துவம் வாய்ந்த ஆலோசனைகளை வழங்குவது.<br>• ஊரகத்துறைக்குத் தகுதிவாய்ந்த நிறுவனங்கள் மூலமாக வேளாண்மைக் கடன் வழங்குவது.<br>**( ஏதேனும் இரண்டு பணிகள் மட்டும் )** | |
| 28) | **தடையற்ற வாணிகப் பகுதி என்றால் என்ன?**<br>* இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட உறுப்பினர் நாடுகள் அனைத்தும் ஒரே மண்டலமாகக்கருதி வாணிகத் தடைகளைக் குறைக்க ஒத்துழைப்பது.<br>* எடுத்துக்காட்டு -- SAFTA, EFTA | |

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

| | |
|---|---|
| 29) | **விதைப்பந்து என்பதன் பொருள் கூறுக**<br>* ஒருவிதை மண்ணால் மூடிவைக்கப்படுகிறது<br>* அந்த மண் உரம் கலந்த களிமண்ணாகும்<br>* பிறகு உலர்த்தப்பட்டு, எங்கு வேண்டுமோ அங்கு அதனை விதைப்பதை விதைப்பந்து என அழைப்பர்<br>* மரங்கள் நடுவதற்கு விதைப்பந்துமுறை எளிதான நீடித்து நிலைக்கும் வழியாகும் |
| 30) | **GST - இன் உள்ளடக்கங்கள் ( கூறுகள் ) யாவை?**<br>**1. CGST**<br>* மாநிலத்திற்குள் நடைபெறும் விற்பனையில் மத்திய அரசால் வசூலிக்கப்படுவது<br>**2. SGST**<br>* மாநிலத்திற்குள் நடைபெறும் விற்பனையில் மாநில அரசால் வசூலிக்கப்படுவது<br>**3. IGST**<br>* மாநில அரசுகளுக்கிடையேயான விற்பனையில் மத்திய அரசால் வசூலிக்கப்படுவது |

**பகுதி -- இ** $7 \times 3 = 21$

**31) தனிமனிதர் வருமானத்திற்கும் செலவிடக்கூடிய வருமானத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன?**

| தனிமனிதர் வருமானம் | செலவிடக்கூடிய வருமானம் |
|---|---|
| ஒவ்வொரு தனிமனிதர்களுக்குப் பலவழிகளில் இருந்து கிடைக்கும் மொத்த வருமானம். | நுகர்வுக்காகச் செலவிடக்கூடிய வருமானத்தைக் குறிக்கிறது. |
| நேர்முகவரி செலுத்துவதற்கு முன்பாகப் பெற்ற மொத்த வருமானம். | நேர்முகவரி செலுத்தியபிறகு பெற்ற மொத்த வருமானம். |
| தனிமனிதர் வருமானம் = நாட்டு வருமானம் + மாற்றுச்செலுத்துதல்கள் | செலவிடக்கூடிய வருமானம் = தனிமனிதர் வருமானம் – நேர்முகவரிகள் |

**32) கீன்ஸ் கோட்பாட்டை விளக்குக.**

* 1936-இல் கீன்ஸின் " வேலைவாய்ப்பு, வட்டி, பணம் பற்றிய பொதுக்கொட்பாடு ஒரு திருப்புமுனையாக இருக்கிறது.
* முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் அங்காடிச் சக்திகளே மாற்றங்களை ஏற்படுத்தி சமநிலையை உருவாக்கும் என நம்பிய தொன்மைப் பொருளியல் அறிஞர்களின் கருத்திற்கு எதிர்மாறான கருத்தைக் களைய புதிய வேலைவாய்ப்புக் கோட்பாட்டை கீன்ஸ் உருவாக்கினார்
* கீன்ஸின் கோட்பாடு, முழுவேலைவாய்ப்புக் கருத்தை மட்டும் விளக்காமல் குறைவேலைநிலைக்கும் வாய்ப்பு உள்ளது என்று கூறினார்
* எல்லாவகைச் சூழ்நிலைக்கும் பொருந்துவதால் கீன்ஸின் கோட்பாடு பொதுக் கோட்பாடாகவே திகழ்ந்தது
* கீன்ஸின் கருத்துகள் குறுகிய காலத்தை அடிப்படையாகக் கொண்டது
* வேலைவாய்ப்பின் அளவு நிர்ணயிக்கப்படும்போது, மூலதனம், உழைப்பு, திறன், தொழில்நுட்பம் ஆகிய உற்பத்திக்காரணிகள் மாறாமலேயே இருக்கும்.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

**33)** நேர்முக, மறைமுக வரிகளுக்கிடையேயான மூன்று வேறுபாடுகளைக் கூறு

| வ. எண் | நேர்முக வரி | மறைமுக வரி |
|---|---|---|
| 1 | நபரின் வருமானம் மற்றும் செல்வம் மீது விதிக்கப்பட்டு நேரடியாக அரசுக்குச் செலுத்துவது | பொருள்கள் அல்லது பணிகளை வாங்கும் நபர்மீது விதிக்கப்பட்டு மறைமுகமாக அரசுக்குச் செலுத்துவது |
| 2 | வளர்வீத தன்மை கொண்டது | தேய்வீத தன்மை கொண்டது |
| 3 | வரியின் சுமையைப் பிறருக்கு மாற்ற இயலாது | வரியின் சுமையைப் பிறருக்கு எளிதாக மாற்ற இயலும் |
| 4 | பணவீக்கத்தைக் குறைக்க உதவுகிறது | விலை உந்துப் பணவீக்கத்தை ஏற்படுத்துகிறது |
| 5 | ஒரே நபர்மீது விழுகிறது | பல்வேறு நபர்கள்மீது விழுகிறது |

**( ஏதேனும் மூன்று வேறுபாடுகள் மட்டும் )**

**34)** **வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கங்களைக் குறிப்பிடுக.**

1. விற்பனையை விரிவுபடுத்துதல்
2. இயற்கை வளங்களைக் கையகப்படுத்துதல்
3. வாணிகப் பரவலாக்கம்
4. போட்டி இடர்களைக் குறைத்தல்

**35)** **இ -- கழிவுகள் என்பதன் பொருள் தருக**

* தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் E – கழிவுகள் என்று அழைக்கப்படும் மின்னணுக் கழிவுகள் ஏற்படுகின்றன
* குளிர்சாதனப் பெட்டிகள், காற்றுச் சீரமைப்பிகள், கைபேசிகள், கணினிகள், கேட்கும் கருவிகள், தொலைபேசி, VCR, DVD, தொலைநகல், நகலெடுக்கும் இயந்திரங்கள் போன்ற வீட்டு உபயோக மின்னணுப் பொருள்களைக் கழிக்கும்போதும் மறுசுழற்சி செய்யும்ம் தோன்றுவது E – கழிவுகள் எனப்படும்

**36)** **சார்க்கின் பணிகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.**

1. தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்பைப் பராமரித்தல்
2. உறுப்பினர் நாடுகளின் பொதுவான சிக்கல்களுக்குத் தீர்வு காணுதல்
3. உறுப்பினர் நாடுகளிடையிலான உறவை மேம்படுத்துதல்
4. வறுமை ஒழிப்புத் திட்டங்கள்மூலம் ஏழ்மையை ஒழிப்பது
5. பயங்கரவாதச் செயல்களைத் தடுப்பது

**37)** **நிதி ஆயோக்கின் பணிகள் யாவை?**

**நிதி ஆயோக்கின் பணிகள்**

1) கூட்டுறவும் போட்டி அடிப்படையிலான கூட்டாட்சியும்
2) நாட்டின் நிகழ்வுகளில் மாநிலங்களைப் பங்கெடுக்கவைத்தல்
3) பரவலாக்கப்பட்ட திட்டமிடல்
4) தொலைநோக்கும் காட்சித் திட்டமிடலும்
5) நிபுணர்களின் கூட்டமைப்பை உருவாக்குதல்
6) உகந்ததாக்குதல் 7) சச்சரவு தீர்த்தல்
8) வெளியுலகத் தொடர்பை ஒருங்கிணைத்தல்
9) உள்நாட்டு ஆலோசனைகளை வழங்குதல்
10) திறன் உருவாக்குதல் 11) கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல்

**( ஏதேனும் மூன்று பணிகள் மட்டும் )**

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

| | |
|---|---|
| 38) | **வரியின் ஏதேனும் மூன்று பண்புகளை எழுதுக**<br>* அரசுக்குக் கட்டாயமாகச் செலுத்த வேண்டிய தொகை<br>* எவ்வித பிரதிபலனும் எதிர்பாராமல் செலுத்த வேண்டிய தொகை<br>* வரி செலுத்துவோரின் தியாகத்தை உள்ளடக்கியது<br>* சட்டத்தை மீறியதற்கான தண்டத்தொகை அல்ல |
| 39) | **பல்வகையான உடன்தொடர்புகளைக் கூறி விளக்குக.**<br>**1) மாறிகளுக்கு இடையேயான உறவின் திசை அடிப்படையில்**<br>1) நேர்மறை உடன்தொடர்பு<br>2) எதிர்மறை உடன்தொடர்பு<br>**2) பகுப்பாய்வுக்கு எடுத்துக்கொள்ளும் மாறிகளுக்கு இடையேயான உறவின் திசை அடிப்படையில்**<br>1) எளிய உடன்தொடர்பு<br>2) பன்முக உடன்தொடர்பு<br>3) பகுதி உடன்தொடர்பு<br>**3) பகுப்பாய்வுக்கு எடுத்துக்கொள்ளும் மாறிகளின் மாறும் விகித அடிப்படையில்**<br>1) நேர்கோட்டு உடன்தொடர்பு<br>2) வளைகோட்டு உடன்தொடர்பு |
| 40) | **மின்னணு வங்கிமுறை பற்றி எழுதுக**<br>* நிகழ்நிலை அல்லது இணைய வங்கிமுறை என அழைக்கப்படுகிறது<br>* வாடிக்கையாளர்கள் தங்களது நிதிப்பரிமாற்றங்களை வங்கிக்கோ அல்லது நிறுவனத்திற்கோ நேரில் செல்லாமல் இணையதளத்திலேயே நிகழ்த்துவது<br>* பாரம்பரியமான கிளை வங்கிமுறைபோல் அல்லாமல் மையப்படுத்தப்பட்ட வங்கிகளுக்குள் இணைப்பினை ஏற்படுத்தி பரிமாற்றங்களும், பிற வங்கி நடவடிக்கைகளும் நடைபெறுகின்றன<br>* மெய்நிகர் வங்கிமுறை வழக்கமான வங்கிமுறையுடன் ஒப்பிடும்பொழுது பரிமாற்றங்களுக்கான செலவையும் நேரத்தையும் குறைக்கின்றது<br><br>**( மேற்காணும் வினா பாடம் - 6 இல் பக்கம் எண் --138 இல் உள்ளது )** |

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

| பகுதி -- ஈ | $7 \times 5 = 35$ |
|---|---|

41) அ) பின்வரும் விவரங்களுக்கு கார்ல் பியர்சனின் உடன்தொடர்புக்கெழுவினைக் கண்டறிந்து அதனை விளக்கவும்.

| விலை | X | 10 | 12 | 14 | 15 | 19 |
|---|---|---|---|---|---|---|
| அளிப்பு | Y | 40 | 41 | 48 | 60 | 50 |

**தீர்வு :**

உறுப்பு மதிப்புகளை நேரடியாகப் பயன்படுத்தி உடன்தொடர்புக்கெழு கண்டறிதல்

| வ.எண் | விலை (X) | அளிப்பு (Y) | XY | $X^2$ | $Y^2$ |
|---|---|---|---|---|---|
| 1 | 10 | 40 | 400 | 100 | 1600 |
| 2 | 12 | 41 | 492 | 144 | 1681 |
| 3 | 14 | 48 | 672 | 196 | 2304 |
| 4 | 15 | 60 | 900 | 225 | 3600 |
| 5 | 19 | 50 | 950 | 361 | 2500 |
| N = 5 | $\sum X = 70$ | $\sum Y = 239$ | $\sum XY = 3414$ | $\sum X^2 = 1026$ | $\sum Y^2 = 11685$ |

உடன்தொடர்புக்கெழு $\gamma = \dfrac{N\sum XY - (\sum X)(\sum Y)}{\sqrt{N\sum X^2 - (\sum X)^2}\sqrt{N\sum Y^2 - (\sum Y)^2}}$

$$\gamma = \frac{(5 \times 3414) - (70)(239)}{\sqrt{(5 \times 1026) - (70)^2}\sqrt{(5 \times 11685) - (239)^2}}$$

$$\gamma = \frac{17070 - 16730}{\sqrt{5130 - 4900}\sqrt{58425 - 57121}} = \frac{340}{\sqrt{230}\sqrt{1304}}$$

$$\gamma = \frac{340}{15.16 \times 36.11} = \frac{340}{547.43} \qquad \boxed{\gamma = 0.621}$$

உடன்தொடர்புக்கெழுவின் மதிப்பு 0.621 ஆக இருப்பதால் பொருளின் விலைக்கும் அளிப்பிற்கும் நேரடி உறவு உள்ளது.

41) அ) பின்வரும் விவரங்களுக்கு கார்ல் பியர்சனின் உடன்தொடர்புக்கெழுவினைக் கண்டறிந்து அதனை விளக்கவும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| விலை | X | 10 | 12 | 14 | 15 | 19 |
| அளிப்பு | Y | 40 | 41 | 48 | 60 | 50 |

**தீர்வு :**

உண்மைச் சராசரியின் அடிப்படையில் உடன்தொடர்புக்கெழு கண்டறிதல்

| வ. எண் | X | $X-\bar{X}=$ (X) | $(X-\bar{X})^2=$ $X^2$ | Y | $y-\bar{y}$ (y) | $(y-\bar{y})^2=$ $Y^2$ | XY |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 10 | − 4 | 16 | 40 | − 7.8 | 64 | 31.2 |
| 2 | 12 | − 2 | 04 | 41 | − 6.8 | 49 | 13.6 |
| 3 | 14 | 0 | 00 | 48 | 0.2 | 0 | 0 |
| 4 | 15 | 1 | 01 | 60 | 12.2 | 144 | 12.2 |
| 5 | 19 | 5 | 25 | 50 | 2.2 | 4 | 11 |
| N = 5 | $\sum X = 70$ | 0 | $\sum X^2 = 46$ | $\sum Y = 239$ | 0 | $\sum Y^2 = 261$ | $\sum XY = 68$ |

கூட்டுச்சராசரி $\bar{X} = \frac{\sum X}{n} = \frac{70}{5} = 14$

கூட்டுச்சராசரி $\bar{Y} = \frac{\sum Y}{n} = \frac{239}{5} = 47.8$

உடன்தொடர்புக்கெழு $\gamma = \frac{\sum XY}{\sqrt{\sum X^2 \sum Y^2}} = \frac{68}{\sqrt{46 \times 261}}$

உடன்தொடர்புக்கெழு $\gamma = \frac{68}{\sqrt{12006}} = \frac{68}{109.57} = 0.621$

**41) அ)**

**பின்வரும் விவரங்களுக்கு கார்ல் பியர்சனின் உடன்தொடர்புக்கெழுவினைக் கண்டறிந்து அதனை விளக்கவும்.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| விலை | X | 10 | 12 | 14 | 15 | 19 |
| அளிப்பு | Y | 40 | 41 | 48 | 60 | 50 |

**தீர்வு :**

ஊகச் சராசரியின் அடிப்படையில் உடன்தொடர்புக்கெழு கண்டறிதல்

| வ.எண் | X | Y | $(X-A)=dx$ (A = 14) | $(Y-B)=dy$ (B = 41) | $dx^2$ | $dy^2$ | dxdy |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 10 | 40 | − 4 | − 1 | 16 | 01 | 04 |
| 2 | 12 | 41 | − 2 | 0 | 04 | 00 | 00 |
| 3 | 14 | 48 | 0 | 7 | 00 | 49 | 00 |
| 4 | 15 | 60 | 1 | 19 | 01 | 361 | 19 |
| 5 | 19 | 50 | 5 | 9 | 25 | 81 | 45 |
| N = 5 | ∑X = 70 | ∑Y = 239 | ∑dx = 0 | ∑ dy = 34 | $\sum dx^2 = 46$ | $\sum dy^2 = 492$ | ∑dxdy = 68 |

உடன்தொடர்புக்கெழு $\gamma = \dfrac{N\sum dxdy - (\sum dx)(\sum dy)}{\sqrt{N\sum dx^2 - (\sum dx)^2}\sqrt{N\sum dy^2 - (\sum dy)^2}}$

$$\gamma = \frac{(5\times 68) - (0)\ (34)}{\sqrt{(5\times 46) - (0)^2}\sqrt{(5\times 492) - (34)^2}}$$

$$\gamma = \frac{(5\times 68) - (0)}{\sqrt{230 - 0}\sqrt{2460 - 1156}} = \frac{340}{\sqrt{230}\sqrt{1304}}$$

$$\gamma = \frac{340}{15.16\times 36.11} = \frac{340}{547.42}\qquad \boxed{\gamma = 0.621}$$

**41) ஆ)**

**நாட்டு வருமானத்தின் முக்கியத்துவத்தை விவரிக்கவும்**

1. பல்வேறு துறைகளின் முக்கியத்துவம் மற்றும் பங்களிப்பு பற்றி அறிய,
2. பணவியல் மற்றும் பொதுநிதிக் கொள்கைகளை உருவாக்க,
3. திட்டமிட மற்றும் திட்டங்களின் விளைவுகளை மதிப்பிட,
4. பொருளாதார மாதிரிகளை உருவாக்க,
5. துறைவாரியான வருமானத்தை ஒப்பிட,
6. தலா வருமானம் கணக்கிட,
7. உற்பத்திக்காரணிகளின் வருமானப் பகிர்வை அறிந்துகொள்ள,
8. பேரியல் பொருளாதாரக்காரணிகளைக் கண்டறியப் பயன்படுகிறது

( ஏதேனும் ஐந்து முக்கியத்துவம் மட்டும் )

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

42 அ)

**இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விவரிக்கவும்**

1) பண அதிகார அமைப்பு

* பண அளிப்பினைக் கட்டுப்படுத்துவதன்மூலம் அந்நியச் செலாவணிப் பரிவர்த்தனை விகிதத்தை நிலைப்படுத்துதல், சாதகமான செலுத்து நிலையைப் பேணுதல், நிதி நிலைத்தன்மையை ஏற்படுத்துதல், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துதல், வங்கியமைப்பை உறுதியாக்குதல் ஆகியவற்றைச் செய்கிறது.

2) காகிதப் பண வெளியீடு

* நாணயங்கள் மற்றும் ஒரு ரூபாய் காகிதப் பணத்தைத் தவிர அனைத்துக் காகிதப் பணத்தையும் வெளியிடுகிறது.
* பண மற்றும் கடன் அளவுகளை மேலாண்மை செய்கிறது.
* போலிப் பணத்தினைக் கட்டுப்படுத்துகிறது.

3) வங்கி உரிமங்கள் வழங்குபவர்

* வணிக வங்கிகள் வங்கித்தொழில் செய்ய உரிமம் வழங்குகிறது.

4) அரசுக்கான வங்கி

* மத்திய, மாநில அரசுகளுக்கு குறுகியகாலக் கடன்களையும், வங்கி மற்றும் நிதி தொடர்பான ஆலோசனைகளையும் வழங்குகிறது.
* கடன்கள், கடன் தெடர்பான சேவைகள், கடன் பத்திரங்களை உருவாக்கி விற்பனை செய்கிறது.

5) வங்கிகளின் வங்கி

* வங்கிகளுக்கு வேண்டிய கடன்களை அளிக்கிறது.
* வைப்புகளை ஏற்கிறது. மாற்றுச்சீட்டுகளைத் தள்ளுபடி செய்கிறது.
* அனைத்து வங்கிகளின் தலைமை வங்கியாகச் செயல்படுகிறது.

6) கடைநிலைக் கடன் ஈவோன்

* வணிக வங்கிகளுக்கு தீர்க்க இயலாத நிதிச்சிக்கல்கள் ஏற்படும்பொழுதும், நிதிக்கான ஆதாரங்கள் இல்லாதபோதும் ஈட்டுக்கடனை அளிக்கிறது.

7) தீர்வாகச் செயல்படுகிறது :

* வங்கிகளுக்கிடையிலான பரிவர்த்தனைகளை தனது 14 தீர்வகங்களால் சமன்செய்கிறது.
* பரிவர்த்தனைக் கருவிகளைப் பரிமாறிக்கொள்வதோடு, பரிவர்த்தனை தொடர்பான அறிவுறுத்தல்களையும் வழங்குகிறது.

8) அந்நியச் செலாவணிப் பாதுகாவலன் :

* அந்நியச் செலாவணி மேலாண்மைச்சட்டம் 1999 (FEMA) -இன்படி அந்நியச் செலாவணியை மேலாண்மை செய்வதோடு இருப்புக்களையும் பாதுகாக்கிறது.
* இந்தியப் பணத்தின் மதிப்பை நிலைப்படுத்த வெளிநாட்டுப் பணத்தை வாங்கி விற்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது.

9) பொருளாதாரத்தை நெறிப்படுத்துகிறது

* பணவியல் கொள்கையை அடிப்படையாகக்கொண்டு பொருளாதாரத்தை நெறிப்படுத்தி விரும்பத்தகுந்த பாதையில் கொண்டுசெல்கிறது.
* தேசிய வருவாய், வேலைவாய்ப்பு, செலவு, சேமிப்பு, முதலீடு போன்ற குறியீடுகளைத் தொடர்ந்து கண்காணித்து நெறிப்படுத்துகிறது.

10) அரசின் கடன் பத்திரங்களை நிர்வகிக்கிறது

* குறிப்பிட்ட சதவிகித சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை அரசின் கடன் பத்திரங்களாகக் கொண்டுள்ள நிறுவனங்களை கண்காணிக்கிறது.

( ஏதேனும் ஐந்து பணிகள் மட்டும் )

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

42) ஆ)


**வறுமையின் நச்சுச் சுழற்சியினை வரைபடத்துடன் விளக்குக**

**வறுமையின் நச்சுச் சுழற்சி**

* முன்னேற்றம் குறைவாக உள்ள நாடுகளில் குறைந்த அளவிலான முன்னேற்றமே தொடர்ந்து நீடிக்கச் செய்யும் சுழற்சியினை உருவாக்குகிறது
* ஏழைநாடுகளைத் தொடர்ந்து வறுமை நிலையிலேயே வைத்திருக்கும்விதத்தில் செயல்படுவதே வறுமையின் நச்சுச் சுழற்சி என ராக்னர் நர்க்ஸ் கூறுகிறார்

**எடுத்துக்காட்டு**

* ஓர் ஏழையிடம் உண்பதற்குப் போதுமான உணவு இல்லை.
* குறைவான உணவு உடல்நிலையைப் பலவீனப்படுத்திவிடும்
* பலவீனமாக இருப்பவரின் உழைக்கும் தகுதி குறைவாக இருக்கும்
* உழைக்கும் திறன் குறைவாக இருந்தால் குறைவான வருமானம் ஈட்டுவர்
* வருமானம் குறைவாக இருப்பதால் அவர் ஏழை, உண்பதற்குப் போதுமான உணவு இருக்காது. இச்சுழல் தொடர்ந்துகொண்டே இருக்கும்
* வறுமையின் நச்சுச் சுழற்சி தேவை மற்றும் அளிப்பு பக்கத்தில் செயல்படும்




**அளிப்புப் பக்கம்**

* குறைவான உண்மை வருமானம் காரணமாக சேமிப்பு அளவு குறைகிறது
* இது முதலீட்டைக் குறைக்கச்செய்து, மூலதனப் பற்றாக்குறை ஏற்பட்டு, உற்பத்தித்திறன் குறைந்து வருமானமும் குறைகிறது

**தேவைப் பக்கம்**

* குறைவான உண்மை வருமானம் காரணமாக தேவையின்அளவு குறைகிறது
* இது முதலீட்டைக் குறைக்கச்செய்து, மூலதனப் பற்றாக்குறை ஏற்பட்டு, உற்பத்தித்திறன் குறைந்து வருமானமும் குறைகிறது


**இவ்வினா பாடம் -- 11-இல் மூன்று மதிப்பெண் வினா எண் -- 28 ஐ ஐந்து மதிப்பெண் வினாவாகக் கேட்கப்பட்டுள்ளது.**

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

43 அ)

**ADF, ASF - க்கு இடையிலான சமநிலையை வரைபடம் மூலம் விவரிக்கவும்**

* கீன்ஸின் வேலைவாய்ப்புக் கோட்பாட்டில் ADF மற்றும் ASF இரண்டின் சமநிலையை விளக்க குடும்பங்கள் மற்றும் வியாபாரம் ஆகிய இருதுறைகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.
* நுகர்வுச் செலவு தொடர்பான முடிவுகளைக் குடும்பங்களும், முதலீடு தொடர்பான முடிவுகளை வியாபார நிறுவனங்களும் எடுக்கின்றன.




* தொகுதேவை மற்றும் தொகுஅளிப்பு அணுகுமுறை விளக்கப்பட்டுள்ளது.
* தொகுதேவை மற்றும் தொகுஅளிப்பு E என்ற புள்ளியில் சமநிலையடைகிறது.
* இப்புள்ளியில் வேலைவாய்ப்பு $N_o$ ஆக இருக்கும்.
* $ON_1$அளவு வேலைவாய்ப்பில் தொகுஅளிப்பு $N_1R_1$ தொகுதேவை $M_1N_1$ ஆகும்
* எதிர்பார்க்கும் இலாபத்தை அடைய முதலாளி அதிக உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்துவர்.
* சமநிலை E என்ற புள்ளியை அடைந்தபிறகு உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்துவதை நிறுத்துவர்.
* ஏனெனில் $N_o$ நிலைக்குப்பிறகு வேலைவாய்ப்பு அதிகரித்தால் தொகுதேவை தொகு அளிப்பைவிடக் குறைவாக இருக்கும்.
* $N_o$ , $N_f$ - க்கும் உள்ள வித்தியாசம் வேலையின்மையைக் காட்டுகிறது.
* வேலைச் சமநிலையை விளக்குவதில் விளைவுத்தேவை முக்கியப்பங்கு வகிக்கிறது.

43) ஆ)

**இந்தியச் சமூகப் பொருளாதார மேம்பாட்டில் டபிள்யூ.டி.ஓ - இன் பங்கினை விவரிக்கவும்.**

* உலக வணிகக அமைப்பு செயல்படத் தொடங்கிய ஆண்டிலிருந்தே இந்தியா உறுப்புநாடாகும்
* உலக வணிக அமைப்பில் உறுப்பினரானதால் இந்தியா கீழ்க்கண்ட நன்மைகளைப் பெற்றுள்ளது

1. இறக்குமதிவரி குறைக்கப்பட்டதால் இடுபொருள்கள், உதிரிபாகங்கள், இயந்திரங்கள் ஆகியன இந்தியாவுக்குக் குறைவான விலையில் அதிகமாகக் கிடைத்துள்ளன.
2. நாடுகளுடன் தனித்தனியே ஒப்பந்தம் போடாமல் பலநாடுகளில் இந்தியா பண்டங்களைவிற்பனை செய்யமுடிகிறது
3. குறைந்த செலவில் உயர்வகைத் தொழில்நுட்பம் கிடைத்துள்ளது
4. பன்னாட்டுப் பரிமாற்றம் தொடர்புள்ள புகார்களுக்கு எளிதில் தீர்வு கிடைக்கும்நிலை உருவாகியுள்ளது
5. பரந்த அங்காடித் தகவலிலிருந்து இந்திய ஏற்றுமதியாளர்கள் பலனடைகின்றனர்

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

<table>
<tr><td>44) அ)</td><td colspan="3">சேயின் அங்காடி விதியினைத் திறனாய்வு செய்க.<br>1. கீன்ஸின் கருத்துப்படி, அளிப்பு அதற்கான தேவையை உருவாக்காது. உற்பத்தி அதிகரிக்கும் அளவிற்குத் தேவை அதிகரிக்காவிட்டால் இவ்விதி செயல்படாது.<br>2. பொருளாதாரத்தில் தானாகச் சரிசெய்துகொள்ளும் அமைப்பு வேலையின்மையைக் குறைக்காது. மூலதனவிகிதத்தை அதிகரித்து வேலையின்மையைக் குறைக்கலாம்.<br>3. தனிநபர்கள் எதிர்பாராத சூழ்நிலைகளுக்காகவும், வியாபாரிகள் எதிர்கால நடவடிக்கைகளுக்காகவும் பணத்தை இருப்பாக வைத்திருப்பர். ஆகவே பணம் நடுநிலையாக இருக்காது.<br>4. அதிக உற்பத்திக்கு வாய்ப்பில்லை என்று சேயின் சந்தை விதி கூறுகிறது. அதிக உற்பத்திக்கு வாய்ப்பு உள்ளது எனக் கீன்ஸ் கூறுகிறார்.<br>5. முதலாளித்துவ நாடுகளில் குறைவான வேலை உள்ளதால் முழுவேலைவாய்ப்புக்குச் சாத்தியமில்லை என கீன்ஸ் கூறுகிறார்.<br>6. அளவுக்கதிகமான உற்பத்தியும், அதிக வேலையின்மையும் பல முதலாளித்துவ நாடுகளில் காணப்படுவதால் அரசின் தலையீடு அவசியம் என கீன்ஸ் கருதுகிறார்.<br>( ஏதேனும் ஐந்து திறனாய்வுகள் மட்டும் )</td></tr>
<tr><td rowspan="4">44) ஆ)</td><td colspan="3">அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலையின் கூறுகளை விளக்குக.<br>* வரவு மற்றும் பற்று இனங்கள் நேர்க்கிடையாக அயல்நாட்டு செலுத்துநிலை அறிக்கையில் பதியப்பட்டு மூன்று இனங்களாக வகைப்படுத்தப்படுகிறது.</td></tr>
<tr><td>நடப்புக் கணக்கு</td><td>மூலதனக் கணக்கு</td><td>மையவங்கி நிதிச்சொத்துக் கையிருப்புக் கணக்கு</td></tr>
<tr><td>பன்னாட்டு பண்ட பரிமாற்றங்கள், பன்னாட்டுப் பணி பரிமாற்றங்கள், பன்னாட்டு ஒருதரப்புச் செலுத்துகைகள் இந்தக் கணக்கின்கீழ் பதியப்படுகிறது.</td><td>வெளிநாட்டுக் கடன், அயல்நாட்டு முதலீடு, பன்னாட்டு பண அங்காடி, பன்னாட்டு நிதி அங்காடி, விற்றல் வாங்கல் பரிமாற்றங்கள் இந்தக் கணக்கின்கீழ் பதியப்படுகிறது.</td><td>மையவங்கியின் கையிருப்பில் உள்ள செலாவணிச் சொத்துகளில் நடைபெறும் பரிமாற்றங்கள் இந்தக் கணக்கின்கீழ் பதியப்படுகிறது.<br>( தங்கத்தின் இருப்பு, வெளிநாட்டுப் பணம், சிறப்பு எடுப்புரிமை, பன்னாட்டுப்பண நிதியத்தின் நிகரக் கடன்பெறும் தகுதி நிலை ஆகியவை பதிவு செய்யப்படுகிறது )</td></tr>
<tr><td>உபரி எழும்</td><td>உபரி எழும்</td><td>நடப்பு மற்றும் மூலதனக்கணக்கில் உபரி எழுந்தால் கையிருப்புக்கணக்கில் சேர்க்கப்படும்</td></tr>
</table>

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

| | | | |
|---|---|---|---|
| | பற்றாக்குறை விழும் | பற்றாக்குறை விழும் | நடப்பு மற்றும் மூலதனக்கணக்கில் பற்றாக்குறை விழுந்தால் கையிருப்பிலிருந்து எடுத்துச் செலவிடப்படும். எனவே **மைய வங்கித் தீர்வுக் கணக்கு** என்ற பெயர் வழங்கப்பட்டது. |

45) அ)

**வணிகச் சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்கவும்**




**1. பூரிப்புக் கட்டம்**

* இயல்பான வளர்ச்சிநிலைக்குமேல் பொருளாதார நடவடிக்கைகள் உயர்ந்து முழு வேலைவாய்ப்புநிலையை அடைவது பூரிப்புக் கட்டமாகும்.
* உற்பத்தி, பணக்கூலி, இலாபம், வட்டிவீதம் மற்றும் கடன் தேவைகள் உயரும்.
* அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளும் உச்சநிலையில் இருக்கும்.

**2. பின்னிறக்கம்**

* பூரிப்பில் வெடிப்புநிலை ஏற்பட்டு பொருளாதார நடவடிக்கைகள் பின்னோக்கித் திரும்புவது பின்னிறக்கம் என்கிறோம்.
* உற்பத்தி, பணக்கூலி, இலாபம் மற்றும் வட்டிவீதம் குறையத் துவங்கும்.
* அவநம்பிக்கைகள் தோன்ற ஆரம்பித்து முதலீடுகள் குறையத் துவங்கும்.
* நீர்மை விருப்பம் அதிகரித்து பணச்சந்தை நடவடிக்கைகள் சுருங்கும்.

**3. மந்தம்**

* பொருளாதார நடவடிக்கைகள் இயல்புநிலைக்குக்கீழ் குறைவது மந்தமாகும்.
* நிறுவனங்கள் நட்டமடைந்து, மூடப்படுவதுடன் வேலைவாய்ப்பின்மையை ஏற்படுத்தும்.
* வட்டி, இலாபம் மற்றும் கூலி மிகக் குறைந்தளவில் இருக்கும்.
* வணிகச் சுழற்சியின் மிக மோசமான கட்டம் மந்தமாகும்.
* மந்தத்தின் கீழ்நிலை "**தொட்டி**" என அழைக்கப்படுகிறது.

**4. மீட்சி**

* பொருளாதார நடவடிக்கைகள் மேல்நோக்கித் திரும்புவது மீட்சி ஆகும்.
* அரசின் தன்னிச்சை மூதலீடுகள்மூலம் வேலைவாய்ப்பு அதிகரித்து வருமானம் உயர்ந்து பொருள்களுக்கான தேவை அதிகரிக்கும்.
* தனியார் முதலீடுகளும் மெதுவாக அதிகரித்து வேலைவாய்ப்பு, உற்பத்தி, வருமானம், கூலி, இலாபம் ஆகியன மீட்சி பெறுகின்றன.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

| | |
|---|---|
| 45) ஆ) | **குறிப்பு எழுதுக : i) பொதுக்கடன் ii) முதன்மைப் பற்றாக்குறை**<br>**i) பொதுக்கடன்**<br>**அ) வரைவிலக்கணம்**<br>* கடன் என்பது அரசுக் கருவூலத்தால் கடன் வழங்கியவர்களுக்கு வட்டியும், அசலும் கொடுப்பதற்கான உத்தரவாதம் ஆகும். நடப்பு நிதிப்பற்றாக்குறையை சரிசெய்வதற்காகத் திரட்டப்படும் நிதி ஆகும் – **பிலிப் - E - டெய்லர்** –<br>**ஆ) பொதுக்கடனின் வகைகள்**<br>**i) உள்நாட்டுப் பொதுக்கடன்**<br>* ஒருநாட்டிற்குள் குடிமக்கள், பல்வேறு நிறுவனங்களிடமிருந்து அரசினால் பெறப்படும் கடனாகும்<br>**உள்நாட்டுப் பொதுக்கடனின் முக்கிய ஆதாரங்கள்**<br>* அரசுப் பத்திரங்கள், ஆவணங்களைத் தனிமனிதர்கள் வாங்குதல்<br>* அரசிடமிருந்து பத்திரங்களைத் தனியார் மற்றும் பொதுத்துறை வங்கிகள் பெறுதல்<br>* அரசுப் பத்திரங்களை நிதிசாரா நிறுவனங்கள்( UTI, LIC, GIC ) பெறுதல்<br>* பண அளிப்பு வாயிலாகவும், பணமாகவும் அரசிற்கு மையவங்கி கடன் வழங்குகிறது<br>**ii) வெளிநாட்டுப் பொதுக்கடன்**<br>* பன்னாட்டு நிறுவனம் வெளிநாட்டிலிருந்து பெறப்படும் கடனாகும்<br>**வெளிநாட்டுப் பொதுக்கடனின் முக்கிய ஆதாரங்கள்**<br>* IMF, IBRD, IDA, ADB ஆகிய அமைப்புகள் மற்றும் வெளிநாட்டு அரசுகள்<br>**ii) முதன்மைப் பற்றாக்குறை**<br>* நிதிப் பற்றாக்குறையிலிருந்து வட்டி செலுத்துதலைக் கழித்தபின் உள்ள பற்றாக்குறை<br>* அரசின் உண்மையான சுமையைக் காட்டுவதோடு, முன்னர் வாங்கிய கடனுக்கான வட்டியைக் கணக்கில் கொள்ளாது<br>* அரசுக் கடனுக்கான வட்டி செலுத்துதலுக்கான தேவையைக் குறிக்கும்<br>* நிதிப்பற்றாக்குறை முதன்மைப் பற்றாக்குறையைவிட அதிகமாக இருக்கும் |
| | **முதன்மைப் பற்றாக்குறை ( $PD$ ) =**<br>**நிதிப் பற்றாக்குறை ( $FD$ ) – வட்டி செலுத்துதல்** |
| | **இவ்வினா பாடம் - 9இல் பொதுக்கடன் ( இரண்டு மதிப்பெண் வினா - 27) முதன்மைப்பற்றாக்குறை ( மூன்று மதிப்பெண் வினா - 33) இரண்டும் சேர்ந்து ஐந்து மதிப்பெண் வினாவாகக் கேட்கப்பட்டுள்ளது.** |

| | |
|---|---|
| 46) அ) | **நீடித்த அல்லது வளம்குன்றா வளர்ச்சியின் முக்கியத்துவம் மற்றும் அதன் நோக்கங்களை விளக்குக**<br>**நீடித்த நிலையான மேம்பாடு**<br>* இப்போதுள்ள தலைமுறையினருக்கு மட்டுமின்றி, எதிர்காலத் தலைமுறையினருடன் வாழ்வதற்குத் தேவையான வளத்தை வைத்துவிட்டு அடைகின்ற மேம்பாடே நீடித்த நிலையான மேம்பாடு எனப்படும்<br>**வளம்குன்றா வளர்ச்சி**<br>* பொருளாதார வளர்ச்சி, சமூகச் சேர்ப்பு, சுற்றுப்புறப் பாதுகாப்பு ஆகிய மூன்று குறிக்கோள்களையும் சேர்ந்து சாதிப்பதே வளம்குன்றா வளர்ச்சி எனப்படும்<br>**நோக்கங்கள்**<br>1) வறுமையற்ற நிலையை உருவாக்குதல்<br>2) ஊட்டச்சத்தால் உயர்ந்த பட்டினியில்லாச் சமுதாயத்தை உருவாக்குதல்<br>3) சிறந்த உடல்நலமுள்ள மனித சமுதாயத்தை உருவாக்குதல்<br>4) தரமான கல்வியை அனைவருக்கும் தருதல்<br>5) பாலினச் சமன்பாட்டைச் சாதித்தல்<br>6) தூய்மையான குடிநீர் மற்றும் துப்புரவை உறுதிப்படுத்துதல்<br>7) தூய்மையான, மலிவான ஆற்றலை உறுதிபடுத்துதல்<br>8) நல்ல வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சியை வழங்குதல்<br>9) தேவையான கட்டமைப்பு வழங்கல் மற்றும் புத்தாக்கம் புனைதல்<br>10) ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல்<br>11) நிலைத்த நகரங்கள் மற்றும் சமுதாயத்தை ஏற்படுத்துதல்<br>12) பொறுப்பான உற்பத்தி மற்றும் நுகர்வை மேற்கொள்ளல்<br>13) தட்பவெப்பநிலை மாற்றத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்<br>14) சமுத்திரங்கள் மற்றும் கடல்வளங்களைப் பாதுகாத்தல்<br>15) காடுகளைப் பராமரித்தல், நிலம் அழிவதையும் உயிர் பன்முகத்தன்மை இழப்பையும் தடுத்து நிறுத்துதல்<br>16) அமைதியான சமூகநீதியுள்ள சமுதாயத்தை உருவாக்குதல்<br>17) நீடித்த நிலையான வளர்ச்சிக்காக உலக ஒத்துழைப்பை உறுதிப்படுத்துதல்<br>**( ஏதேனும் ஐந்து நோக்கங்கள் மட்டும் )** |

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

46) ஆ)

**நுகர்வுச்சார்பினைத் தீர்மானிக்கும் புறக்காரணிகளை விளக்குக.**

**புறக்காரணிகள்**

**1. வருமானப் பகிர்வு**

* செல்வந்தர்களுக்கும், ஏழைகளுக்கும் இடையே பெரிய அளவில் வேறுபாடு இருந்தால் நுகர்வு குறையும்.
* காரணம் செல்வந்தர்கள் அதிகப்படியான சேமிப்பு விருப்பம் கொண்டிருப்பர்
* சமநிலை வருமானப் பகிர்வுச் சமூகத்தில் நுகர்வு விருப்பம் அதிகமாக இருக்கும் என V.K.R.V.ராவ் கூறுகிறார்

**2. விலை அளவு**

* விலை வீழ்ச்சியடையும்போது உண்மை வருமானம் அதிகரிக்கும்
* மக்கள் அதிகமாக நுகர்வதோடு சமூகத்திலும் நுகர்வு விருப்பம் அதிகரிக்கும்

**3. கூலி அளவு**

* நுகர்விற்கும் கூலிக்கும் இடையே நேர்கணியத் தொடர்பு இருக்கும்
* கூலி அதிகரிக்கும்போதும், எதிர்பாராத இலாபம் ஏற்படும்போதும் நுகர்வுச்செலவு அதிகரிக்கும்

**4. வட்டி விகிதம்**

* அதிக வட்டிவிகிதம் பணத்தைச் சேமிக்க ஊக்கமளிக்கும். ஆகவே நுகர்வைக் குறைக்கும்.

**5. நிதிக்கொள்கை**

* அரசு வரியைக் குறைக்கும்போது செலவிடத்தக்க வருமானம் அதிகரித்து நுகர்வு விருப்பம் அதிகரிக்கும்.
* வளர்வீத வரிக்கொள்கையானது ஏழைகளுக்குச் சாதகமான வருமானப் பகிர்வைத் தருவதால் ஏழைகளின் நுகர்வு விருப்பம் மாறும்.

**6. நுகர்வோர் கடன்**

* எளிய தவணைக்கடன்களால் ஊர்திகள், குளிர்சாதனப்பெட்டி,கணினி முதலான நுகர்வுப் பண்டங்களை வாங்க அதிகப்படுத்தும்

**7. மக்கள்தொகைக் காரணிகள்**

* குடும்ப அளவு அதிகமாக இருந்தால் நுகர்வு அதிகமாக இருக்கும்
* குடும்ப வாழ்க்கைச் சுழற்சிநிலை, இருப்பிடம், தொழில் ஆகியன நுகர்வைப் பாதிக்கும்
* ஆரம்பக்கல்வி மாணவர்களுக்குச் செலவு செய்வதைவிட, கல்லூரிக்கல்வி மாணவர்களுக்கு அதிகமாக செலவு செய்வர்
* கிராமப்புறக் குடும்பங்களைவிட நகர்ப்புறக் குடும்பங்கள் அதிகமாக செலவு செய்வர்

**8. டூசன்பெரி ஊகம்**

* நுகர்வுச்செலவானது தற்போதைய வருமானத்தை மட்டும் சார்ந்திராமல் முந்தைய வருமானத்தையும் வாழ்க்கைத்தரத்தையும் சார்ந்திருக்கும்
* வெளிக்காட்டும் விளைவின் காரணமாகவும் நுகர்வு தீர்மானிக்கப்படுகிறது ஏழைகள் செல்வந்தர்களைப்போலவே செலவு செய்ய விரும்புவர்

**9. எதிர்பாராத இலாபம் அல்லது இழப்பு**

* பங்குச்சந்தையில் ஏற்படும் எதிர்பாராத மாற்றம் இலாபத்தையோ இழப்பையோ ஏற்படுத்தி நுகர்புச்சார்பை மேல்நோக்கியோ கீழ்நோக்கியோ நகரச்செய்யும்

**( ஏதேனும் ஐந்து புறக்காரணிகள் மட்டும் )**

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

| | |
|---|---|
| 47) அ) | **பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரி.**<br>**1. நாட்டு வருமானம் ( தேசிய வருவாய் ) :**<br>நாட்டு வருமானத்தைக் கணக்கிடுதல், நாட்டு வருமானத்தில் பல துறைகளின் பங்கு முதலானவை பேரியல் பொருளாதாரப் பகுத்தாய்வின் அடிப்படை அம்சங்கள்.<br>**2. பணவீக்கம் :**<br>பொதுவான விலையளவு தொடர்ந்து அதிகரிப்பதைக் குறிப்பதாகும். விலைக் குறியீட்டெண்களைப் பயன்படுத்தி மொத்த விலையளவை மதிப்பிடுவது அவசியமாகும்.<br>**3. வணிகச் சுழற்சி :**<br>எல்லா நாடுகளும் வணிகச்சுழற்சியால் ஏற்படும் பிரச்சினைகளைச் சந்திக்கின்றன.<br>மொத்தப் பொருளாதாரக் காரணிகளை அப்படையாகக்கொண்டு நாட்டின் வணிகச் சுழற்சி மாற்றங்களைத் தெரிந்துகொள்ள முடிகிறது<br>**4. வறுமையும் வேலையின்மையும் :**<br>பேரினப் பொருளாதாரம்மூலம் வறுமையையும் வேலையின்மையையும் தீர்க்க முடிகிறது<br>இச்சிக்கல்களுக்குத தீர்வுகாண வளங்களை ஒதுக்கீடு செய்யவும், சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் உதவுகிறது<br>**5. பொருளாதார வளர்ச்சி :**<br>பேரியல் பகுத்தாய்வின்மூலம்தான் ஒரு பொருளாதார அமைப்பின் வளர்ச்சி, முன்னேற்றம் அவற்றைத் தீர்மானிக்கும் காரணிகள் ஆகியவற்றைப் புரிந்துகொள்ள முடியும்<br>**6. பொருளாதாரக் கொள்கைகள் :**<br>பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்க உதவுகிறது.<br>அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண, தடைகளைத் தகர்த்தெரிய, வளர்ச்சியை அடைய பொருளாதாரக்கொள்கைகள் தேவைப்படுகின்றன.<br>**( ஏதேனும் ஐந்து பரப்பெல்லைகள் மட்டும் )** |

| | |
|---|---|
| 47) ஆ) | **திட்டமிடலுக்கு எதிரான வாதங்களை எடுத்துரைக்கவும்**<br>**1) தன் விருப்பம்போல் செயல்பட இயலாமை**<br>* திட்டமிட்ட பொருளாதாரத்தில் சிக்கலான முடிவுகளை மத்தியத் திட்டக்குழு எடுப்பதால் நுகர்வோர், உற்பத்தியாளர், பணியாளர்களை கட்டுப்படுத்துகிறது<br>* அரசின் முடிவுகள் சரியாக இல்லாததால் தனியார் உற்பத்தியாளர்களுக்கு சுதந்திரம் வழங்கி, மக்கள்நலன் புறக்கணிக்கப்பட்டு இலாபத்திற்கே முக்கியத்துவம் வழங்கப்படுகிறது<br>* மக்களின் பொருளாதார விடுதலையைக் கட்டுப்படுத்தினால் நாடு பொருளாதார மந்தநிலைக்குச்செல்லும் என்கிறார் **பிரடெரிக் ஹேயக்**<br>**2) தன் முனைப்புக் குறைதல்**<br>* ஊக்கப்படுத்துதலுக்கும் புதுமைகளைப் புகுத்துதலுக்கும் இடமளிக்காது வழக்கமான செயல்முறைகளைப் பின்பற்றி வளர்ச்சியில் தேக்கத்தை உண்டுபண்ணுகிறது<br>* இடர்தாங்கிப் புதுமையைப் புகுத்தி இலாபத்தைப் பெறத் தூண்டுதல் இல்லை<br>* இடர்பாடுகளை ஏற்றுப் புதிய நிறுவனங்களைத் துவக்க முன்வருவதில்லை<br>* உயர் பதவியில் உள்ளவர்கள் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துகின்றனர்<br>**3) அதிகமான நிர்வாகச் செலவு**<br>* தொழில்மயமாக்கல், சமூகநீதி, நாட்டு நிலைமையைச் சமப்படுத்துதல் ஆகியவற்றுக்காகச் செலவிடும் தொகை அடையவுள்ள பலனைவிட அதிகம்<br>* சரியான புள்ளிவிபரம் இல்லாமை, தவறாகக் கணிப்பது, திட்டமிடுதலைச் சரிவரச் செயல்படுத்தாது போன்றவை வளங்களை வீணடித்து உபரி அல்லது பற்றாக்குறை ஏற்படும்<br>* திட்டமிடல் சிறப்பாக அமையவேண்டுமானால் கூடுதலான திட்டமிடல் நிபுணர்கள் தேவை என்கிறார் **ஆர்தர் லூயிஸ்**<br>**4) முன்கணிப்பதில் உள்ள இடர்கள்**<br>* அரசு தடையில்லாத நாட்டில் அங்காடிச் சக்திகள் தானாக இயங்கி ஒன்றையொன்று சரிசெய்து கொள்கிறது<br>* திட்டமிடல் நாடுகளில் அளிப்பும் தேவையும் விலைமாற்றத்திற்கேற்ப சரிசெய்துகொள்ளும் வசதி இல்லை<br>* நுகர்வு மற்றும் உற்பத்தியை துல்லியமாக முன்கணிக்க இயலவில்லை |